# 13

### சபை:

# இதன் மூப்பர்கள், இவர்களின் தகுதிகள்

## தகுதிகள் அட்டவணைப்படுத்தப்படுகின்றன

| எதிர்மறை அடையாளங்கள் | வசனக் குறிப்புகள் | அர்த்தம் |
|---|---|---|
| *சண்டை பண்ணாதவன் (போராட்டமின்மை)* | *1 தீமோ. 3:3* | *சண்டையிடாமை (கலகம் பண்ணாதவர்)* |
| *பண ஆசை இல்லாதவன் (இழிவான ஆதாயத்தை இச்சிக்காதவன்)* | *1 தீமோ. 3:3; தீத்து 1:7* | *பொருளாசையில்லாமை* |
| *அடியாதவன்* | *1 தீமோ. 3:3; தீத்து 1:7* | *முரட்டாட்டமில்லாமை* |
| *நூதன சீஷன்* | *1 தீமோ. 3:6* | *புதிதாய் மனம்மாறியவராய் இல்லாமை* |
| *மதுபானப் பிரியன்* | *1 தீமோ. 3:3; தீத்து 1:7* | *மதுவுக்கு அடிமையாக இல்லாமை* |
| *தன் இஷ்டப்படி செய்யாதவன்* | *தீத்து 1:7* | *தன் வழியே போகத் தீர்மானம் செய்யாமை* |
| *முற்கோபமில்லாதவன்* | *தீத்து 1:7* | *எரிச்சல் இல்லாமை* |
| **நேர்மறை அடையாளங்கள்** | | |
| *போதக சமர்த்தன்* | *1 தீமோ. 3:2* | *போதிக்கும் திறனும் ஆயத்தமும்* |
| *குற்றஞ்சாட்டப்படாதவன்* | *1 தீமோ. 3:2; தீத்து 1:6* | *அவருக்கெதிராகக் குற்றம் ஒன்றும் நிரூபிக்கப்படக் கூடாமை* |
| *சாந்த குணம்* | *1 தீமோ. 3:3* | *பொறுமை, தாழ்மை* |
| *அந்நியரை உபசரித்தல்* | *1 தீமோ. 3:2* | *அந்நியரை நேசித்தல் - சிந்தித்தல்* |
| *புறம்பானவர்களால் நற்சாட்சி* | *1 தீமோ. 3:7* | *புறம்பே இருப்பவர்களால் மதிக்கப்படுதல்* |
| *விசுவாசமுள்ள பிள்ளைகளைக் கொண்டிருத்தல்* | *தீத்து 1:6* | *விசுவாசம் நிறைந்த பிள்ளைகள்* |
| *வசனத்தைப் பற்றிக் கொள்ளுதல்* | *1 தீமோ. 3:2* | *வசனத்தின் மீது பற்றுறுதி* |

| | | |
|---|---|---|
| *பரிசுத்தவான்* | *தீத்து 1:8* | *இருதயத்திலும் வாழ்விலும் ஒப்புக் கொடுத்தலும் பக்தியும்* |
| *ஒரே மனைவியை உடைய புருஷன்* | *1 தீமோ. 3:2; தீத்து 1:6* | *பல மனைவிகள் இல்லாமை செயல்களில் நேர்மை* |
| *நீதிமான்* | *தீத்து 1:8* | *நல்ல விஷயங்கள் மற்றும்* |
| *நல்லவை மேல் பிரியமுள்ளவன்* | *தீத்து 1:8* | *நல்ல மனிதர்களை நேசித்தல்* |
| *யோக்கியதையுள்ளவன்* | *1 தீமோ. 3:2* | *நன்னடத்தை - பாங்கான நடக்கை* |
| *தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகின்றவன் (தன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப் பண்ணுகிறவன்)* | *1 தீமோ. 3:4; தீத்து 1:6* | *தனது வீட்டைத் தக்கவாறு ஆளுகின்ற தன்மை* |
| *இச்சையடக்கமுள்ளவன்* | *தீத்து 1:8* | *தன்னை ஆளுதல்* |
| *தெளிந்த புத்தியுள்ளவன்* | *1 தீமோ. 3:2* | *ஆரோக்கிய மனம் - தெளிவான தன்மை* |
| *உணர்வுக் கட்டுப்பாடுள்ளவன்* | *தீத்து 1:8* | *சுயமறுப்பு; மதுபானம் பண்ணாமை* |
| *ஜாக்கிரதையுள்ளவன்* | *1 தீமோ. 3:2* | *கவனம் நிறைந்த தன்மை* |
| *கண்டனம் செய்யப்படாதவன்/ தூஷிக்கப்படாதவன்* | *1 தீமோ. 3:7* | *புறம்பேயிருந்து* |

## ஆழ்ந்து சிந்திக்கச் சில விஷயங்கள்

1. ***மூப்பரின் தகுதிகளில் உள்ள எதிர்மறை அடையாளங்கள் எத்தனை?***
2. ***அவரது தகுதிகளில் உள்ள நேர்மறை அடையாளங்கள் எத்தனை?***
3. ***பணத்துடனான அவரது தொடர்பை விளக்கப்படுத்தும் அடையாளம் எது?***
4. ***அவரது வீட்டாருக்கு அவர் செய்ய வேண்டியவற்றைக் கூறும் அடையாளங்களைக் குறிப்பிடவும்.***
5. ***மற்ற நபர்கள் - புறம்பே உள்ளவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றைக் குறிப்பிடும் பண்புகள் யாவை?***
6. ***தேவனுடைய வசனத்திற்குச் செய்ய வேண்டியதைக் குறிப்பிடும் அடையாளங்கள் யாவை?***
7. ***இச்சையடக்கத்தைக் குறிப்பிடும் அடையாளங்களைக் கூறவும்.***
8. ***ஆரோக்கியமான முடிவு பற்றிக் குறிப்பிடும் அடையாளங்கள் யாவை?***
9. ***அர்த்தத்தில் ஒன்று போலிருக்கும் சில அடையாளங்களைக் குறிப்பிடவும்.***
10. ***"குற்றமற்ற தன்மை" என்பது பாவமற்ற தன்மை என்று அர்த்தப்படுகின்றதா?***

11. ***மூப்பர் இந்த அடையாளங்கள் யாவற்றையும் முற்றாகக் கொண்டிருக்க வேண்டுமா அல்லது ஓரளவு என்ற கருத்தில் கொண்டிருக்க வேண்டுமா?***
    - *அ. இவை எல்லாவற்றையும் முற்றாகக் கொண்டுள்ள மூப்பர் ஒருவரை உங்களுக்குத் தெரியுமா?/நீங்கள் அறிந்துள்ளீர்களா?*
    - *ஆ. இவை எல்லாவற்றையும் ஓரளவு கொண்டுள்ள மூப்பர் ஒருவரை உங்களுக்குத் தெரியுமா?*
12. ***தனி மனிதர் ஒருவர்/ஒரே ஒரு மனிதர் மூப்பராய் இருக்க முடியுமா?***
13. ***பிள்ளைகள் இல்லாத மனிதர் மூப்பராய் இருக்க முடியுமா?***
14. ***கிறிஸ்தவர்களாய் இராத பிள்ளைகளைக் கொண்ட மனிதர் மூப்பராய் இருக்க முடியுமா?***
15. ***இந்த அடையாளங்கள் யாவற்றையும், சாத்தியமென்றால் ஒவ்வொரு கிறிஸ்தவரும் விரும்ப வேண்டாமா?***
16. ***அப்படியென்றால், ஒரு மூப்பர் என்பவர் எவ்விதத்தில் மற்றவர்களை விட மேன்மைப்படுகின்றார்?***
17. ***வசன ரீதியான மூப்பர்களால் "புறம்பே உள்ளவர்கள்" எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்/செயல்விளைவு பெறுகின்றனர்?***
18. ***வசன ரீதியற்ற மூப்பர்களால் புறம்பே உள்ளவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர்?***
19. ***மூப்பர் என்பவர் சற்றே மட்டும் மதுபானம் பண்ணுகிறவராய் இருக்கலாமா? "இச்சையடக்கம்"*** **(temperate)** ***என்பது இதைத் தான் அர்த்தப்படுத்துகின்றதா?***
20. ***மூப்பர் திரைப்படங்களைக் காணச் செல்லலாமா? (தீத்து 2:7, 8)? அவர் மல்யுத்தப் போட்டிகள், நடனங்கள், அல்லது மதுபான விருந்துகள் நடக்கும் இடங்களுக்குச் செல்லலாமா (1 தெச. 5:22)?***